## கூட்டுறவுத் துறை
## தேனி மாவட்டம்

விளம்பரம் எண்.2/2020 நாள்:01.08.2020

**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், தேனி மாவட்டம்**
**கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்**
**மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,**
**பல்துறை கட்டட வளாகம் I**
**தேனி**

தேனி மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளின் விற்பனையாளர்கள் (Sales person) பதவிக்கு மட்டும் நேரடி நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் 29.08.2020 பிற்பகல் 5.45 வரை வரவேற்கப்படுகின்றன.

| வ.எண். | நேரடி நியமன பதவி வவரம் | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தி பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Sales person) | 1. தொகுப்பு ஊதியம் ரூ.5000/-நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2.ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ.4300 - 12000/- (ஆண்டு ஊதிய உயர்வு 2.5%) | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 25 |
| | | | வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் | 1 |
| | | **மொத்த காலிப்பணியிடங்கள்** | | **26** |

**2.நிபந்தனைகள்:-**

1. மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின் போது அரசுப் பணியாளர்கள் தேர்வுக்குப் பின்பற்றப்படும் வகுப்பு வாரி சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படும்.

| பதவி | மொத்த காலிப் பணியிடம் | வகுப்பு வாரி இடஒதுக்கீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொதுப் பிரிவு | பிற்படுத்தப் பட்டோர் | பிற்படுத்தப் பட்டோர் (முஸ்லீம்) | மிகவும் பிற்படுத்தப் பட்டோர்/ சீர்மரபினர் | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | ஆதிதிராவிடர் (பழங்குடியினர்) |
| நியாயவிலைக் கடை விற்பனையாளர் | 26 | 7 | 6 | 1 | 6 | 4 | 1 | 1 |

2. காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டது.

3. நியமனத்தின் போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாதபோது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதி வாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.

4. ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் (கண் பார்வையற்றோர் தவிர) மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் இந்த நியமனத்தின் போதும் பின்பற்றப்படும். மேற்படி விபரங்கள் உரிய விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5.மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் மேல் முறையீடு உரிய காரணங்களுடன் செய்யப்படவேண்டும். அதற்குப்பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

6. உடற்தகுதி சான்றிதழ்:

மேற்படி பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் உடற்தகுதி சான்றிதழினைப் பெற்று சம்பந்தப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தில் பணியில் சேரும்போது சமர்ப்பிக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவிகளுக்கான பணியினை செய்வதற்குத் தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவக் குழுமத்திடமிருந்து பெறப்பெற்ற சான்றிதழினையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**3.தகுதிகள்:**

அ) வயது(01.01.2020 அன்று உள்ளவாறு)

1) விண்ணப்பதாரர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். (அதாவது 01.01.2002 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்.)
2) விண்ணப்பதாரர்கள் 01.01.2020 அன்று கீழ்க்கண்ட வயதினை பூர்த்தி அடைந்தவர்களாக இருக்கக்கூடாது

| | | |
|---|---|---|
| 1) | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்பினைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |
| 2) | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | வயது வரம்பு இல்லை |
| 3) | மேற்படி வகுப்பினை சாராத இதர விண்ணப்பதாரர்கள் | 30 வயது |
| 4) | மாற்றுத்திறனாளிகள் மற்றும் முன்னாள் ராணுவத்தினர்களுக்கு அரசாணைபடி வயது வரம்பு விலக்களிக்கப்படும். | |

ஆ. **கல்வித் தகுதிகள்:**

நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் - மேல்நிலை வகுப்பு (+2) தேர்ச்சி அல்லது அதற்கு சமமான கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

**4.தமிழ்மொழித்திறன்:**

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று தமிழ் மொழியில் எழுதப்படிக்கப் போதுமானத் திறன் உள்ளவராக இருக்க வேண்டும்.

**5. தெரிவு முறை:**

மேற்படி காலிப் பணியிடங்கள், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகிய அனைத்திற்கும் நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் நிரப்பப்படும். இப்பணியிடங்களுக்கான நபர்கள் நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் வகுப்புவாரி சுழற்சிக்குட்பட்டும், காலிப் பணியிடங்களுக்குட்பட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்குக் கட்டாயமாக வருகை புரிய வேண்டும். நேர்முகத் தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள்.

**6. காலிப்பணியிடங்களுக்கான விருப்பம் தெரிவித்தல்**

விண்ணப்பதாரர்கள் தாங்கள் எந்த நிறுவனத்தின் நியாய விலைக் கடைக்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான விருப்பத்தை நேர்முகத் தேர்வின் போது தெரிவிக்க வேண்டும். விண்ணப்பதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கான பணியிடம் ஒதுக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டால் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் முடிவின்படி அவர்களுக்குப் பணியிடம் ஒதுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது.

**7. விண்ணப்பங்கள் விநியோகித்தல்:-**

மேற்படி நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் பணி நியமனங்களுக்கான விண்ணப்ப படிவத்தை 01.08.2020 முதல் 29.08.2020 வரை பிற்பகல் 5.45 மணியளவில் அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் பின்வரும் இடங்களில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விண்ணப்பத்தினை தேனி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் இணையதளத்திலிருந்து (drbtheni.net) பதிவிறக்கம் செய்தும் விண்ணப்பிக்கலாம்.

1. தேனி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் பெரியகுளம் ரோடு, தேனி
2. தேனி மாவட்ட கர்னல் ஜான் பென்னிகுய்க் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, போடிநாயக்கனூர்.
3. மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளை, தேனி, போடி, உத்தமபாளையம், சின்னமனூர், கம்பம், பெரியகுளம், ஆண்டிபட்டி, மயிலாடும்பாறை, வரதராஜர் நகர், வைகை அணை கிளைகள்.

**8. விண்ணப்பப் பதிவுக் கட்டணம்:-**

நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் நியமனத்திற்கான விண்ணப்பப் பதிவுக் கட்டணம் ரூ.150/- (ஆதிதிராவிடர், பழங்குடியினர், அனைத்து வகுப்பைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகள் மற்றும் அனைத்து வகுப்பினைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு விண்ணப்ப பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. மேற்படி விண்ணப்பக் கட்டணம் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தேனி மாவட்டத்தில் உள்ள கிளைகளில் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், தேனி மாவட்டம் (District Recruitment Bureau, Theni) என்ற பெயரில் உள்ள செலுத்துசீட்டுகளின் மூலம் செலுத்தி அசல் செலுத்துசீட்டினை (DRB copy) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்

படிவத்தின் எண் மற்றும் விண்ணப்பிக்கப்படும் தேதி, செல்போன் எண் மற்றும் விண்ணப்பத்தாரர் பெயர் ஆகியவை சலானில் எழுதப்பட வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள் சமூக நலத்துறை அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவ சான்றிதழும் பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

“ஆதரவற்ற விதவை” என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4000க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதுமாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய வருவாய் கோட்ட அலுவலா் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமா்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவா், கணவரால் கைவிடப்பட்டவா் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார். மறுமணம் புரிந்தவா் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார்.

விண்ணப்பக்கட்டண செலுத்துச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். ஒரு முறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

**9. விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டிய இணைப்புகள்:-**

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து சான்றிதழ்களின் சுய சான்றளிக்கப்பட்ட நகல்களையே இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும், அசல் சான்றிதழ்களை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பக் கூடாது. சான்றிதழ்கள் நகல்கள் இணைக்கப்படாமல் அனுப்பபட்ட விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**10. <u>நேர்முகத் தேர்வு</u>**

நேர்முகத் தேர்வுக்குரிய அழைப்புக் கடிதம், விண்ணப்பதாரர்கள் அவா்களுடைய விண்ணப்பத்தில் குறிப்பிட்ட தபால் முகவரிக்கு அனுப்பப்படும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும், இது தொடர்பாக, எந்த உரிமையும் கோர இயலாது. நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள பயணப்படி ஏதும் வழங்கப்படாது.

**11. <u>தடையில்லாச்சான்று</u>**

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக (நிரந்தரமாகவோ, அல்லது தற்காலிகமாகவோ) இருக்கும் பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்திலிருந்து தேவையான <u>தடையில்லாச்சான்றினை</u> நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

**12. <u>பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைப் பெறுதல்.</u>**

அ)விண்ணப்பதாரர்கள் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்த விண்ணப்பங்கள்/அல்லது நேரடியாக பெற்ற விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

1) விண்ணப்ப படிவங்கள் பந்து முனைப் பேனா (Ball point pen) கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடதத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் இட வேண்டும். கையொப்பம் இல்லாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2) விண்ணப்ப படிவத்தில் அனைத்து கலங்களும் இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் அடிப்படையில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3) விண்ணப்ப படிவத்துடன் பதிவு கட்டணத்திற்கான செலுத்துச்சீட்டு தவறாமல் இணைக்கப்பட வேண்டும்.

4) விண்ணப்பதாரர் தனது பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்ப படிவத்தில் ஒட்டுவதுடன் அழைப்பு கடிதத்திலும் ஒரு புகைப்படத்தினை ஒட்ட வேண்டும். இந்த இரண்டு புகைப்படங்களும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும். மேலும் சுய முகவரியிட்ட ரூ.25.00க்கான தபால் வில்லை ஒட்டிய 24x10 செ.மீ. உறையினையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

ஆ. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இணைப்பதிவாளர் / தலைவர், மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், தேனி மாவட்டம், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம், (மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பல்துறை வளாகம் I, தேனி) என்ற முகவரிக்கு 29.08.2020 மாலை 5.45க்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கும்படி சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் அஞ்சல் தாமதம் போன்ற காரணங்கள் ஏற்கப்பட மாட்டாது.

**இணைப்பதிவாளர்/தலைவர்,**
**மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,**
**தேனிமாவட்டம்.**